**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No.23 of 2019**

**Prosecution Witness: PW7**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பாலசுப்ரமணியன் | **Caste** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**(Accused present)**

**Dated.09.05.2023.**

**முதல் விசாரணை**

நான் கடைசியாக கல்லக்குடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 31.03.2020 ம் தேதி பணி ஓய்வு பெற்று தற்போது வாத்தலையில் குடியிருந்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின் போது சிறுகனூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 15.12.2016 ம் தேதி நிலைய பொறுப்பில் இருந்த போது சுசீலா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.423/2016, இதச பிரிவுகள் 279, 337, 304(A)ன் கீழ் 7.00 மணிக்கு வழக்கினை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும், பதிவு செய்யப்பட்ட வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) –

புகார்தாரர் வழக்கு சம்பவம் தொடர்பாக 15.12.2016 ம் தேதி காலை 7 மணிக்கு புகாரை கொடுத்தார். புகாரானது வாய் மொழியாக கொடுக்கப்பட்டதா

அல்லது எழுத்து மூலமாக கொடுக்கப்பட்டதா என்றால் புகார்தாரரால் எழுதி கொடுக்கப்பட்டது. 14.12.2016 ம் தேதி இரவு 7.40 மணிக்கு விபத்து நடைபெற்றதாக புகாரில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த நேரத்திற்கும் புகார் கொடுக்கப்பட்ட நேரத்திற்கும் இடையே 11 மணி நேரம் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். விபத்து நடைபெற்ற இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் இடையே சுமார் 7 கி.மீ தூரம் இருக்கும், விபத்து நடந்த இடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு சுமார் 1/2 மணி நேரத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். புகாரில் காலதாமதமாக கொடுத்ததற்கான காரணத்தை புகார்தாரர் சொல்லவில்லை என்றால் சரிதான். புகார்தாரருக்கு அவரது நண்பர் ரமேஷ் மூலம் தகவல் கிடைத்ததாக புகாரில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். புகாரை பெற்ற பிறகு நான் சம்பவ இடத்தை சென்று பார்க்கவில்லை. நான் சம்பவ இடம் சென்று பார்த்திருந்தால் இறந்துபோனவரின் வாகனம் தான் எதிரி வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்ட விவரம் எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. இறந்துபோன கலியமூர்த்தி தான் விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதே தவறு என்றால் சரியல்ல. எதிரி மீது பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

ஒப்பம்/-செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர்(FAC),
இலால்குடி.

/உண்மை நகல்/

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR

நீதித்துறை நடுவர்(FAC),
இலால்குடி.